**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.158/2017 –** P.W.11

Deposition of witness for Prosecution:

Name : திரு. வெங்கடாச்சலம் Father's Name. சண்முகம்

Village : பஞ்சநதிக்குளம்

Date : 27.01.2025

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 27.01.2025.

**( 1, 2, 4 முதல் 6, 9 முதல் 11, 13, 14 மற்றும் 16 முதல் 19 ஆகியோர் ஆஜர். 7ம் எதிரி ஆஜராகவில்லை. அவருக்காக குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், அவர்கள் தரப்பு கற்றிந்த வழக்கறிஞர் ஆஜரானார். )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் பஞ்சநதிக்குளத்தில் வசித்துவருகிறேன். விவசாய வேலைப்பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. என் முன்னிலையில் யாரையும் கைது செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்துக்கள் எதுவும் என்னுடையதில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதிக்க வேண்டியதன் அடிப்படையில், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் **அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

போலிசார் விசாரணையின் போது கடந்த 31.01.2010ம் தேதி மாடிக்கடை பேருந்து நிறுத்தம் அருகில் எதிரி வெற்றிச்செல்வம் மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர்களை போலிசார் மதியம் 1 மணியளவில் மாடிக்கடை பேருந்து நிறுத்தம் அருகே கைது செய்து விசாரித்தபோது எதிரி வெற்றிச்செல்வம் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தில் நான் சாட்சியாக இருந்து கையெழுத்துப்போட்டேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரி வெற்றிச்செல்வனை எனக்கு யார் என்று தெரியாது என்றும் அவரை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதில்லை என்றும், எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

மறுவிசாரணை - இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.158/2017 –** P.W.12

Deposition of witness for Prosecution:

Name : திரு. அன்முபகன் Father's Name. வைரக்கண்ணு

Village : பஞ்சநதிக்குளம் கிழக்கு

Date : 27.01.2025

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 27.01.2025.

**( 1, 2, 4 முதல் 6, 9 முதல் 11, 13, 14 மற்றும் 16 முதல் 19 ஆகியோர் ஆஜர். 7ம் எதிரி ஆஜராகவில்லை. அவருக்காக குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், அவர்கள் தரப்பு கற்றிந்த வழக்கறிஞர் ஆஜரானார். )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் பஞ்சநதிக்குளம் கிழக்கில் வசித்துவருகிறேன். விவசாய வேலைப்பார்த்துவருகிறேன். அசா.1றான முன்னாள் அமைச்சர் ஓ.எஸ். மணியனை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதிக்க வேண்டியதன் அடிப்படையில், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் **அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

போலிசார் என்னை விசாரணை செய்ததாகவும், அவ்வாறு விசாரணை செய்தபோது கடந்த 28.01.2010ம் தேதி பவுன்ராஜ் திருமண மண்டபத்தில் அசா.1 திரு.ஓ.எஸ். மணியனுக்கு நடந்த இவ்வழக்கின் சம்பவத்தை கேள்விப்பட்டதாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற இவ்வழக்கு சம்பவத்தை எதுவும் தெரியாது போலவும், போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றும் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

**மறுவிசாரணை – இல்லை.**